DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC –01/2024

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.பேச்சியம்மாள் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused produced.)

05.12.2024– 04.30 PM

முதல் விசாரணை:–

1. நான் கடலாடியில் குடியிருந்து நகைப்பட்டரை வைத்து தொழில் செய்து வருகிறேன்.

2. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் அவரை அழைத்துக் கொண்டு நாகர்கோவில் சென்றுவிட்டேன்.

3. எனது மகன் சிவகாசியில் உள்ள கல்லூரியில் தங்கி படித்து வந்தார். வீட்டை பூட்டிவிட்டு சென்றுவிட்டோம். பின்னர் எனது கணவரை ஓய்வு எடுக்க சொன்னதால் எனது பெற்றோரின் வீடான விருதுநகருக்கு சென்று 5 நாட்கள் தங்கியிருந்தோம்.

4. விருதுநகரில் இருந்தபோது எனது மச்சானின் மனைவி மாலையம்மாள் என்பவர் எங்கள் வீடு உடைக்கப்பட்டிருப்பதாக தகவல் சொன்னார். நானும், எனது மகனும் உடனடியாக கிளம்பி வீட்டிற்கு வந்தோம்.

5. வீட்டின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டிருந்தது. எனக்கு சொந்தமான 6 பவுன் டாலர் செயின் – 1, 3/4 பவுன் எடையுள்ள கம்மல் – 1 ஜோடி,

மோதிரம்–1, ஓம் டாலர் ஒரு கிராம், உருக்கிய தங்கம் சுமார் 2 கிராம் ஆகியவற்றை காணவில்லை. பணம் ரூ.50,000/–ம் காணவில்லை.

6. பொருட்கள் அனைத்தையும் ஒரு பெட்டியில் வைத்து பீரோவில் வைத்திருந்தேன். மறுநாள் சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.

7. பின்னர் 1–1/2 மாதம் சென்று போலீசார் திருடுபோன நகைகள் கண்டுபிடித்து விட்டதாக சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்று எனது நகைகளை பார்த்தேன். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து எனது பணத்தையும், நகையையும் பெற்றுச்சென்றேன்.

8. நகைகளை மீட்ட தினமே காவல் நிலையத்தில் வைத்து எதிரியை நான் பார்த்தேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அவரது பெயர் சேவுகராஜன் என்று தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படம் போட்டோவில் உள்ள நகைகள் மற்றும் பணத்தைதான் நான் நீதிமன்றத்திலிருந்து பெற்றுச்சென்றேன்.

9. வழக்குச் சொத்தை காட்டக்கூடிய குறுந்தகடுடன் கூடிய புகைப்படங்கள் (எண்ணம் – 4) அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

இல்லை.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)